5309

Register Number | | | | | |

# தமிழ் - இரண்டாம் தாள்

# Language – Part A – TAMIL – Paper II

நேரம் : 2 $\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) கையெழுத்து தெளிவாக இருத்தல் வேண்டும்.

ii) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.

iii) கட்டுரைகள் முன்னுரை, பொருளுரை மற்றும் முடிவுரைகளைக் கொண்டு இருத்தல் வேண்டும்.

I. எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் விடை தருக : 5 × 1 = 5

1. ஆசிரியர் இலக்கணம் கற்பித்தார்.
 – செயப்பாட்டு வினை வாக்கியமாக மாற்றுக.
2. திருவள்ளுவரை அனைவரும் போற்றுவர்.
 – பொருள் மாறாமல் எதிர்மறை வாக்கியமாக மாற்றுக.
3. வானத்து விண்மீன்கள் மிக அழகாக உள்ளன.
 – உணர்ச்சி வாக்கியமாக மாற்றுக.
4. முயன்றால் முடியாதது இல்லை.
 – வினா வாக்கியமாக மாற்றுக.
5. அறம் செய்ய விரும்ப வேண்டும்.
 – கட்டளை வாக்கியமாக மாற்றுக.
6. 'நாளை நான் மதுரை செல்வேன்' என்று நன்மாறன் கூறினான்.
 – அயற்கூற்று வாக்கியமாக மாற்றுக.
7. மணி அயராது உழைத்தான்; அதனால், வாழ்வில் முன்னேறினான்.
 – கலவை வாக்கியமாக மாற்றுக.

[ Turn over

II. கீழ்க்காணும் வினாக்கள் அனைத்திற்கும் விடையளிக்கவும். 5 × 1 = 5

8. ஏதேனும் *ஒன்றனுக்கு* மட்டும் பொருள் விளங்க வாக்கியத்தில் அமைத்து எழுதுக :

அ) பசுமரத்தாணி போல

ஆ) வாழையடி வாழையாய்

இ) தன் கையே தனக்குதவி.

9. வழூஉச் சொற்களைத் திருத்தி எழுதுக :

உசிரு உள்ளவரை உன்னெ மறக்க மாட்டேன்

10. மரபுப்பிழை நீக்கி எழுதுக :

கீரிக்குட்டியும் மான்குட்டியும் ஓடின

11. பிறமொழிச் சொற்களை நீக்கி ஏற்ற தமிழ்ச் சொற்களை எழுதுக :

ஓட்டலுக்குச் சென்று நாஸ்டா சாப்பிட்டான்

12. ஏற்ற இடங்களில் நிறுத்தற் குறிகளை இட்டு எழுதுக :

சிதம்பரனார் ஒரு வழக்கறிஞர் வீரவாழ்க்கை நடாத்திய வீரர் சிறந்த தமிழ்ப்புலவர் முதன்முதலில் கப்பல் ஓட்டிய உத்தமர்

III. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக : 3 × 2 = 6

13. பகுபத உறுப்பிலக்கணம் தருக : ( ஒன்றனுக்கு மட்டும் )

அ) வாழ்க ஆ) தழைக்க.

14. பிரித்து எழுதுக :

அ) அரவணை ஆ) உடனெய்தும்.

15. இன்றியமையாத இலக்கணக் குறிப்பு தருக : ( இரண்டனுக்கு மட்டும் )

அ) மாநெறி

ஆ) உரைப்பார்

இ) நெடும்புனல்.

IV. கீழ்க்காணும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிந்து எழுதுக : 20 × 1 = 20

16. குற்றியலுகரம் வகை ..................... .

அ) 6

ஆ) 8

இ) 5.

17. தனிமொழிக்கு எடுத்துக்காட்டு ..................... .

அ) தத்தை ஆ) தமிழ்

இ) தாமரை ஈ) நீள்புகழ்.

18. ஆய்த எழுத்துக்குரிய மாத்திரை ..................... .

அ) ஒன்று ஆ) இரண்டு

இ) அரை ஈ) மூன்று.

19. வெற்றிலை என்பது ..................... எனப் பிரியும்.

அ) வெற்று + இலை

ஆ) வெறு + இலை

இ) வெறுமை + இலை.

20. இலக்கண முறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் ..................... .

21. தேவி வந்தான் என்பது ..................... .

அ) பால் வழு ஆ) திணை வழு

இ) மரபு வழு ஈ) கால வழு.

22. தொலைவில் தோன்றுவது பசுவோ ? எருதோ ? என்பது

அ) கொளல் வினா ஆ) கொடை வினா

இ) அறி வினா ஈ) ஐய வினா.

23. சுட்டு, மறை, நேர் ஆகிய மூன்று விடைகளும் ..................... விடைகளாக அமையும்.

அ) நேரடியாக

ஆ) குறிப்பாக

இ) மறைவாக.

24. ஆதிநீடலுக்கு எடுத்துக்காட்டு

அ) வெற்றிலை

ஆ) பைந்தமிழ்

இ) பாசடை.

[ Turn over

25. மலையும், மலைசார்ந்த இடமும் .................... ஆகும்.

26. மருத நிலத்திற்குரிய சிறுபொழுது .................... .

27. பகைவர் நாட்டைக் கைப்பற்ற போருக்குச் செல்வது .................... .

அ) வெட்சித் திணை

ஆ) வஞ்சித் திணை

இ) காஞ்சித் திணை

ஈ) நொச்சித் திணை.

28. பொருத்துக :

ஊக்கத்தோடு போரிடல் — வாகை

வெற்றி பெறுதல் — தும்பை

— வெட்சி.

29. ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் .................... ஆகும்.

அ) வினைச்சொல்

ஆ) உரிச்சொல்

இ) இடைச்சொல்

ஈ) பெயர்ச்சொல்.

30. பொருத்துக :

பெயரெச்சம் — படித்தனன் முடித்தான்

வினையெச்சம் — படித்த முருகன்

— படித்து முடித்தான்.

31. செப்பலோசை பெற்று வருவது .................... .

அ) வஞ்சிப்பா

ஆ) ஆசிரியப்பா

இ) வெண்பா

ஈ) கலிப்பா.

32. ஆசிரியப்பா .................... வகைப்படும்.

33. தொழில் நிகழ்வதைக் காட்டுவது .................... வினைமுற்றாகும்.

34. மீமிசை ஞாயிறு

அ) இரட்டைக் கிளவி

ஆ) ஒரு பொருட்பன்மொழி

இ) அடுக்குத்தொடர்.

35. நீர் சலசல என வாய்க்காலில் ஓடியது. இதில் சலசல என்பது .................... .

அ) அடுக்குத் தொடர்

ஆ) ஒரு பொருட்பன்மொழி

இ) இரட்டைக் கிளவி.

V. அ) கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் *ஆறனுக்கு* மட்டும் விடையளி : $6 \times 2 = 12$

36. உயிரளபெடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

37. ஐகாரக் குறுக்கமாவது யாது ? சான்றுடன் விளக்குக.

38. பொதுமொழியை விளக்குக.

39. தெரிநிலை வினைமுற்றை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

40. வியங்கோள் வினைமுற்று எவ்வெப் பொருளில் வரும் ?

41. வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

42. இனமொழி விடை என்றால் என்ன ?

43. அடுக்குத்தொடர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

ஆ) பின்வரும் வினாக்களுள் எவையேனும் *ஆறனுக்கு* மட்டும் விடையளி : $6 \times 2 = 12$

44. வடகிழக்கு - பிரித்துக்காட்டி புணர்ச்சி விதி தருக.

45. சிறுபொழுது எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

46. தும்பைத் திணையாவது யாது ?

47. வெண்பாவின் வகைகள் யாவை ?

48. 'எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு'

- இக்குறட்பாவில் பயின்று வரும் அணியைச் சுட்டுக.

49. தற்குறிப்பேற்ற அணியை விளக்குக.

*அல்லது*

வஞ்சப்புகழ்ச்சி அணியை விளக்குக.

50. கீழ்க்காணும் குறட்பாவை அலகிட்டு வாய்பாடு கூறுக.

உள்ளம் இலாதவர் எய்தார் உலகத்து
வள்ளியம் என்னுஞ் செருக்கு.

VI. 51. கீழ்க்காணும் பாடலைப் படித்துப் பொருளுணர்ந்து பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக : 5 × 2 = 10

எளியநடையில் தமிழ்நூல்கள் எழுதிடவும் வேண்டும்
இலக்கணநூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்
வெளியுலகில் சிந்தனையில் புதிதுபுதி தாக
விளைந்துள்ள எவற்றினுக்கும் பெயர்களெல்லாம் கண்டு
தெளிவுறுத்தும் படங்களோடு சுவடியெலாம் செய்து
செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்வதுவும் வேண்டும்
எளிமையினால் ஒருதமிழன் படிப்பில்லை யென்றால்
இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்.

- பாரதிதாசன்

*வினாக்கள் :*

அ) தமிழ் நூல்கள் எவ்வாறு படைக்க வேண்டுமென்று பாரதிதாசன் கூறுகிறார் ?

ஆ) எதனைப் புதிதாக இயற்றுதல் வேண்டும் ?

இ) செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செய்ய பாரதிதாசன் கூறும் வழி யாது ?

ஈ) தமிழர் எப்போது நாணிட வேண்டுமென்று பாரதிதாசன் கூறுகிறார் ?

உ) இப்பாடலுக்கு ஏற்ற தலைப்பைத் தருக.

VII. 52. நீ கண்டு களித்த சுற்றுலா இடங்கள் பற்றி உன் நண்பனுக்கு மடல் ஒன்று எழுதுக. 1 × 10 = 10

*அல்லது*

களவுபோன உன் மிதிவண்டியைக் கண்டுபிடித்துத் தருமாறு காவல்துறை ஆய்வாளருக்குக் கடிதம் வரைக.

VIII. 53. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்று குறித்து ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : 1 × 10 = 10

அ) சுற்றுச்சூழல் பாதுகாப்பு

ஆ) மாணவரும் பொதுநலத் தொண்டும்

இ) தேசிய ஒருமைப்பாடு.

IX. 54. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றனுக்கு மட்டும் ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் கட்டுரை வரைக : 1 × 10 = 10

அ) தாய்ப்பசுவின் செயலும் கதை உணர்த்தும் நீதியும்.

ஆ) பெத்தமனம் பித்து பிள்ளைமனம் கல்லு என்ற பழமொழியை காய்ச்சமரம் என்னும் கதையைக் கொண்டு விளக்குக.

இ) வேலை(ளை) வந்துவிட்டது - இக்கதைத் தலைப்பின் பெயர்பொருத்தத்தை விளக்குக.

ஈ) மண்ணாசை - பெயர் பொருத்தத்தை ஆய்க.